தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 20-2-2018

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## மறைந்த தமிழக வேளாண் பல்கலைக்கழக நெல் ஆராய்ச்சி விஞ்ஞானிக்கு விருது

முனைவர் ச. இராபின் (லேட்), முதன்மையர், முதுநிலை வேளாண்மை மற்றும் அந்நாள் பேராசிரியர் மற்றும் தலைவர், நெல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அவர்களுக்கு இந்திய அளவில் முதல் முறையாக வழங்கப்படும் இ.ஏ. சித்திக் விருது (2015-16) இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனம், புது தில்லியில் இருந்து வழங்கப்பட்டது.

முனைவர் இராபின் அவர்கள் நெல்லில் பலஉயர் விளைச்சல் இரகங்களை உருவாக்குவதற்கு முக்கிய காரணமாக இருந்துள்ளார். அவரின் “நெல் மரபியல் ஆராய்ச்சியின் பயனாக உயர் விளைச்சல் இரகங்களும் வீரிய ஒட்டுகளும் (கோஆர் எச் 3 மற்றும் கோஆர் எச் 4 ) வெளியிடப்பட்டுள்ளது. அவர் வறட்சியை தாங்கி வளரும் நெல் இரகங்களான பரமக்குடி 2, பரமக்குடி 3, மதுரை 5, டி.ஆர்.ஆர். தான் 40 மற்றும் உப்புத் தன்மையை தாங்கி வளரும் இரகமாக திருச்சி 2, வெள்ளத்தை தாங்கி வளரும் சி.ஆர் 1009 சப் 1 ஆகியவையும் உயர் விளைச்சல் சன்ன இரகங்களான கோயமுத்தூர் 48, கோ 49, கோ 50, கோ 51 மற்றும் கோ 52 இரகங்களையும் வெளியிட்டுள்ளார். கோ 51 சன்ன நெல் இரகத்தை பிரபலப்படுத்துவதில் இந்திய அளவில் முயற்சி எடுத்து 13 மாநிலங்களுக்கு அந்த நெல்லைப் பயிரிடுவதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுத் தந்துள்ளார். தமிழ்நாட்டில் கோ 51 இரகத்தை பயிரிட்ட ஒரு விவசாயி 18 டன்கள் மகசூல் எடுத்து சாதனை படைத்து தமிழக முதல்வரிடம் கடந்த குடியரசுதின விழாவில் ரூ 5 லட்சம் ரொக்கம் பரிசு பெற்றுள்ளார்.

முனைவர் ச. இராபின் (லேட்) அவர்களின் இந்த நெல் ஆராய்ச்சிகளின் சாதனைகளுக்காக முனைவர் இ.எ. சித்திக் பயன்னியம் விருது, மரபியல் துறை, இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழகத்தில் பிப்ரவரி 9, 2018 ஆம் ஆண்டு புது தில்லியில் வழங்கப்பட்டது. முனைவர் ஏ.கே. சிங், துறைத் தலைவர், முனைவர் பத்ம ஸ்ரீ ஆர்.பி. சர்மா அவர்கள் அன்னாரின் சாதனைகளைப் பற்றிக் கூறினார்கள். விழாவின் சிறப்பு விருந்தினர் முனைவர் கே.வி. பிரபு, சேர்மன், பி.பி.வி எப்.ஆர்.ஐ அவர்கள் விருதை முனைவர் ச. இராபின் அவர்களின் துணைவியார் திருமதி. சலோமி இராபினுக்கு வழங்கினார். விழாவில் பல முன்னோடி விஞ்ஞானிகள் பங்கு பெற்றனர்.

மக்கள் தொடர்பு அலுவலர்